முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1351

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.06.2023, ஞாயிற்றுக்கிழமை

1. முழுமைகண்ட ஞான தேசிகனே
மண்ணுலகில் ஞானியர்கள் நிறைந்த
வலுவான ஞான உலகமாக மாற்ற
வரம்பெற்று வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும் அருளுவேன் ஞான அறிவுரைஆசி

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 28 ம் நாள், 11.06.2023, ஞாயிற்றுக்கிழமை)

வரமென அரங்கன் நீ வந்த நோக்கம் வையகத்தில் முழுமை பெற்றால் போதும்
பேருலகே ஞானலோகமாகி
புகலுவேன் உலகோர்க்கு பிரம்ம ஞான இரகசியம்

3. இரகசியங்கள் அனைத்தும் ஞானமாகி
உலகமெங்கும் அரங்கமகான்
உன் செயல் வடிவே
உத்தமமாய் செயலாக்கமாக மாறி
4. உலகினிலே ஞானவான்கள் ஆட்சி
உண்மைதனை வழங்குகின்ற ஞானிகள் ஆட்சியாக
கலகங்கள் பேரிடர் பிறதுன்பமின்றி
கலியுகமே ஞான யுகமாக மாற்றங்கண்டு
5. கண்டுமே அரங்கன் உன் தவதர்ம பலத்தால்
கலியினை ஞானவான்கள் ஆளும்படி
அழிவில்லாத மகா சக்தி நிலையாக
அரங்கன் உன் ஆசியால் இனிதே அரங்கேறும்
6. அரங்கேற்றத்தை சுப்ரமணியப்பெருமான் யான்
அரங்கன் உன்னுள் இருந்து நடத்தி வருகின்றேன்
வரங்களாக நாடிவரும் மக்கள் கூட்டம்
வையகத்தில் உன்னை தேடி பெருகப்பெருக

7. பெருகவே பேருலகம் மாற்றம் பெறும்
பிரணவப்பிரியன் யான் விரும்ப
சரவணச்சுடர் வழி அனைவருக்கும் காட்சி
சாற்றிடுவேன் உலகமெல்லாம் நிகழ்ந்து இனிதே
8. இனிதே உலகோர் அனைவரும்
இறைநிலை பெற்று பேருலகில்
கனிவேலவன் யான் ஆளுகின்ற காலமாக
கருணைமிக்க மக்கள் கூட்டமாக உலகம் மாறி அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–